தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
ஆகஸ்ட் 05, 2013 இதழுடன் இணைப்பு

இணைய இணைப்பு அறுந்து போனால்?

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் விண்டோஸ் போன் அப்ளிகேஷன்

இந்தியாவைத் தேடுங்கள் கூகுள் அழைக்கிறது

கம்ப்யூட்டருக்கான கட்டாயப் பணிகள்

கம்ப்யூட்டர்கள் இன்றைய கால கட்டத்தில் நம் உடனுறை நண்பனாக மாறி விட்டது. மனைவி, குழந்தைகளைக் கூட கை பிடித்து அழைத்து வராத பலர், இதனை பையில் போட்டு முதுகில் பத்திரமாகத் தூக்கிக் கொண்டு செல்வது நாம் அன்றாடம் பார்க்கும் காட்சி. இருந்தும், நாம் அந்த கம்ப்யூட்டரின் முழுத் திறனையும் பயன்படுத்தும் வகையில், அதனை வைத்திருக்கிறோமா? பராமரிக்கிறோமா? அதில் மேற்கொள்ள வேண்டிய சில முக்கிய வேலைகளை அவ்வப்போது செயல் படுத்தி வருகிறோமா? என்றால், நிச்சயமாய் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அப்படி, நாம் கட்டாயமாக மேற்கொள்ள வேண்டிய, ஆனால் பெரும்பாலானவர்கள்

உள்ளே

இணைய இணைப்பு அறுந்து போனால்? பக்கம் 8
ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் விண்டோஸ் போன் அப்ளிகேஷன் பக்கம் 11
போட்டோக்களைக் காப்பாற்ற புதிய தளம் பக்கம் 14

வாசகர்களே...

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல் 'சிடி'க்கள் குறித்து கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

நூல்கள் மற்றும் 'சிடி'க்கள் 2013 மார்ச் மாதத்திற்கு முன் வெளியாகியிருக்கக் கூடாது. நூல்கள் மற்றும் 'சிடி'க்களை உருவாக்கியவர், வெளியிட்டவர், கிடைக்கும் இடங்கள், விலை ஆகியவற்றைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

தினமலர் - கம்ப்யூட்டர் மலர், 39, ஒயிட்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை 600 014
computermalar@dinamalar.in

மேற்கொள்ளாத சில வேலைகளை இங்கு காணலாம்.

1. கம்ப்யூட்டர், கீபோர்ட், மானிட்டர் திரை

உங்கள் கம்ப்யூட்டரை நீங்கள் சுத்தமாக வைத்திருக்கிறீர்களா? கம்ப்யூட்டரைச் சுற்றிப் பரவும் தூசியும் அழுக்கும், கம்ப்யூட்டர் சிபியுவில் புகுந்து, உள்ளே வெப்பத்தினைத் தணிக்க இயங்கும் மின் விசிறிகளின் செயல்திறனைக்



குறைக்கும். இதனால், கம்ப்யூட்டரின் செயல் திறனும் குறையும். சுத்தப்படுத்துவதற்கான பொருட்களைத் தயார் செய்து வைத்துக் கொண்டு, கம்ப்யூட்டரை ஷட் டவுண் செய்து, மின் இணைப்பிலிருந்து நீக்கி, ஸ்குரூக்களை நிதானமாகக் கழற்றி, உள்ளே சேர்ந்திருக்கும் தூசியையும், அழுக்கையும் அகற்றவும். உள்ளே மின்விசிறியிலும், வெளியே வெப்பம் வெளியேறும் துவாரங்களிலும் நிச்சயம் அதிகமாகத் தூசு தென்படும். இவற்றை நீக்கிச் சுத்தப்படுத்த வேண்டும். குறைந்த அளவில் வேகமாக காற்று அடிக்கும் கருவியைப் பயன்படுத்தி, சிபியு மின் விசிறி, மதர்போர்ட் மற்றும் கிராபிக்ஸ் போர்ட் ஆகியவற்றில் படிந்துள்ள தூசியை நீக்கவேண்டும். வேறு இடங்களில் படிந்துள்ள தூசியையும் நீக்கவும்.

அடுத்ததாக கீ போர்ட். இதனைக் கழட்டி, தலைகீழாகக் கவிழ்த்து, சிறியதாகத் தட்டினால், நம்மை அறியாமல் கீகளுக்கிடையே உள்ள இடைவெளியில் சென்ற சிறிய தூசுகள் எல்லாம் வெளியேறும்.இங்கும் காற்றடிக்கும் சிறிய கருவியின் மூலம் தூசியை வெளியேற்றவும்.

சிறிய பேப்பர் டவலில் தண்ணீர் அல்லது பெட்ரோல் நனைத்து, கீகளின் மேலாகவும், பக்கவாட்டிலும் சுத்தம் செய்திடவும். குறிப்பாக நம் விரல்கள் கீகளின் எந்த இடத்தில் தொடுகிறதோ, அந்த இடங்களில் அழுக்கு சேர்ந்திருக்கும். இதனைக் கட்டாயம் நீக்க வேண்டும். இதே போல மவுஸ் சாதனத்தையும் சுத்தப்படுத்தவும்.

இறுதியாகக் கவனிக்க வேண்டியது மானிட்டர். மைக்ரோ பைபர் துணி கொண்டு இதனைச் சுத்தம் செய்திடலாம். இதனை நீர் அல்லது வினீகரில் நனைத்து, திரையையும் சுற்றி உள்ள பகுதியையும் சுத்தம் செய்திட வேண்டும்.

2. டேட்டா பேக் அப்

இந்தக் கட்டுரையில் தரப்பட்டிருக்கும் டிப்ஸ்கள், அவற்றின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசையில் இல்லை. இருந்தால், இந்த டிப்ஸ்தான் முதலில் இருக்க வேண்டும். உங்கள் கம்ப்யூட்டர் ஆண்டாண்டு காலம் இயங்கிக் கொண்டே இருக்காது. ஒரு நாளில், முடங்கிப் போய் தன் இயக்கத்தை நிறுத்திவிடும். உள்ளே நாம் சேர்த்து வைத்த முக்கிய பைல்களை நம் பயன்பாட்டிற்கு எடுக்க இயலாமல் போய்விடும். வெள்ளம், தீ, பூகம்பம், திருட்டு மற்றும் பிற விபத்துக்கள் எதிர்பாராமல் நடப்பது போல, உங்கள் கம்ப்யூட்டரின் ஹார்ட் டிஸ்க்கும் சுழலாமல் நின்று விடும். என்ன செய்தாலும், அதில் உள்ள பைல்கள் கிடைக்காத நிலை ஏற்படும். எனவே, நம் உழைப்பின் கனிகளான அந்த பைல்கள் உங்களுக்கு வேண்டும் எனில், அவற்றை உருவாக்கிய

வுடனேயே, அதற்கு பேக் அப் எடுக்க வேண்டும். இதற்கு பேக் அப் சாப்ட்வேர் பயன்படுத்தலாம். அல்லது, நாமே விழிப்புடன் இருந்து, ஒன்றுக்கு இரண்டாக நல்ல பிளாஷ் ட்ரைவ் அல்லது எடுத்துச் செல்லக் கூடிய ஹார்ட் ட்ரைவ்களில் நம் டேட்டா பைல்களை பேக் அப் எடுக்க வேண்டும்.

3. மால்வேர் பாதுகாப்பு

நான் அனைத்து பாதுகாப்பு வழிகளையும் கையாள்கிறேன். சந்தேகத்திற்கிடமான இமெயில்களைத் திறப்பதில்லை; தேவையற்ற தளங்களைப் பார்ப்பதில்லை; எனக்கு இதுவரை மால்வேர் புரோகிராம்களே வந்ததில்லை என்று நீங்கள் உறுதியாக இருந்தாலும், உங்கள் கம்ப்யூட்டர் இந்த வகையில் அடிபடும் வாய்ப்புகள் அதிகம். நீங்கள் என்னதான் கவனமாக இருந்தாலும், ஏதேனும் ஒரு சிறிய செயல்பாடு, உங்கள் கம்ப்யூட்டருக்கு வைரஸைக் கொண்டு

வரலாம். எனவே, ஆண்ட்டி வைரஸ், ஆண்ட்டி மால்வேர் புரோகிராம்களை இன்ஸ்டால் செய்து கட்டாயம் பயன்படுத்த வேண்டும். இதற்கென இலவச புரோகிராம்கள் மட்டுமின்றி, கட்டணம் செலுத்திப் பெறும் புரோகிராம்களும் கிடைக்கின்றன. இவற்றில் எதனைத் தேர்ந்தெடுத்து தொடர்ந்து இயக்கி வந்தாலும், அவற்றை அவ்வப்போது இணைய இணைப்பு கொடுத்து அப்டேட் செய்திட வேண்டும். இல்லையேல் பயன் இருக்காது.

4. சாப்ட்வேர் அப்டேட்

சாப்ட்வேர் என்பது சாக்லேட் பால் மாதிரி. முதலில் அதனை மிக மிக விரும்புவீர்கள். அடிக்கடி பயன்படுத்துவீர்கள். நாள் ஆக ஆக,



அதன் தன்மை மாறும். நம்பகத்தன்மை குறையும். பாதுகாப்பு கிடைக்காது. எனவே எந்த ஒரு பயன்பாட்டு சாப்ட்வேர் புரோகிராமினையும், அப்டேட் செய்திட வேண்டும். நீங்கள் என்ன செய்திட வேண்டும் என அந்த சாப்ட்வேர் தொகுப்பினை உருவாக்கி, அப்டேட் தரும் நிறுவனம் கற்றுக் கொடுக்கும். எனக்குப் பழையதே போதும் என ஒருநாளும் இருக்க வேண்டாம்.

5. பைல்களை ஒழுங்கு படுத்துக

நாம் எப்போதும், டெஸ்க்டாப்பில் பைல்களைக் குவித்து வைப்போம். அப்புறம் அவற்றை போல்டருக்குக் கொண்டு செல்லலாம் என்று சொல்வோம்; ஆனால், செய்ய மாட்டோம். அதே போல, டாகுமெண்ட்ஸ் (மை டாகுமெண்ட்ஸ்) போல்டரில் உள்ள ஏதேனும் ஒரு போல்டரில், பைல்களை எல்லாம் போட்டு வைப்போம். இது போன்ற ஒத்தி வைக்கும் செயலால், நமக்குதான் பிரச்னை வரும்.

உங்கள் பைல்களின் தன்மை உங்களுக்குத் தான் தெரியும். எனவே, அவற்றின் தகவல் பண்

பின் அடிப்படையில், போல்டர்களை உருவாக்கி, பிரித்து, பயன்படுத்தத் தயாராக வைத்திருக்கவும். இதனை உடனுடக்குடன் செய்வது சிறப்பு என்றாலும், வாரம் ஒருமுறையாவது மேற்கொள்ள வேண்டும். நீங்கள் விண்டோஸ் 7 அல்லது விண்டோஸ் 8 பயன்படுத்துபவராக இருந்தால், இதற்கென உள்ள Libraries வசதியைப் பயன்படுத்தவும்.

பைல்களை இவ்வாறு ஒழுங்கு படுத்தும் போது, இன்னொரு வகை பிரச்னையைச் சந்திக்கலாம். பழைய, மிகப் பழைய, பயனற்ற பைல்கள், பல போல்டர்களில் குவிந்து போய் இருக்கும். ஏன், அப்ளிகேஷன் புரோகிராம்களே, அதிக இடத்தை எடுத்து அடைத்துக் கொண்டிருக்கும். இவற்றை நீக்கி, உங்கள் கம்ப்யூட்டரைச் சுத்தப்படுத்தலாம்.

பைல்களை நீங்களாகச் சுத்தப்படுத்திய பின்னர், சிகிலீனர் போன்ற, கம்ப்யூட்டர் பைல்களைச் சுத்தம் செய்திடும் புரோகிராம்களைப் பயன்படுத்தலாம்.

6. சொந்த கதை சோகக் கதையைச் சுருக்குக

உங்களுடைய வாழ்க்கையின் எவ்வளவு பகுதி, பைல்களாக உங்கள் கம்ப்யூட்டரில் அடைந்து கிடக்கிறது. மருத்துவ சோதனை அறிக்கைகள், பேங்க் ஸ்டேட்மெண்ட் அல்லது மற்றவர்கள் பார்க்கக் கூடாத பிற சொந்த பைல்கள் என எத்தனையோ, நம் பெர்சனல் பைல்கள் கம்ப்யூட்டரில் பதியபட்டு இருக்கலாம். இந்த

வகை பெர்சனல் பைல்களை, மற்றவர்கள் பார்க்க இயலாதபடி, என்கிரிப்ட் (encrypt) செய்து விட வேண்டும். இதற்கு உதவிட ட்ரூகிரிப்ட் போன்ற தர்ட் பார்ட்டி புரோகிராம் கள் கிடைக்கின்றன.

7. பாஸ்வேர்ட்களை மாற்றவும்

ஒரே பாஸ்வேர்டை அனைத்து புரோகிராம் களிலும் பயன்படுத்த வேண்டாம். சரியான,

வலுவான பாஸ்வேர்ட்களை உருவாக்கிப் பயன் படுத்தவும். குறிப்பிட்ட கால வரையறை யில் அவற்றை மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனென்றால், எந்த பாதுகாப்பு சிஸ்டமும், முழு மையான நம்பிக்கைக்குரியவை இல்லை. எனவே, அதிக பாதுகாப்பு தேவைப்படும், நிதி சார்ந்த பணிகளுக்குப் பயன்படுத்தும் பாஸ் வேர்ட்களை, அடிக்கடி கூட மாற்றலாம். இவ் வாறு மாற்ற வேண்டியதனை, நினைவு படுத்தவும் தர்ட் பார்ட்டி சாப்ட்வேர் தொகுப்பு கள் இலவசமாக இணையத்தில் கிடைக்கின் றன.

8.ஸ்டார்ட் அப் ட்யூனிங்

கம்ப்யூட்டரை இயக்க அமர்ந்தால், அது நிலைப்பாட்டிற்கு வர அதிக நேரம் எடுக்கி றதா? நீங்கள் அமைக்காத, உங்களுக்குத் தேவைப்படாத, பல புரோகிராம்கள், ஸ்டார்ட்



அப் போல்டரில் அமர்ந்து கொண்டு, கம்ப்யூட் டரை இயக்கும்போது, தாங்களும் இயங்கி, பின்னணியில் செயல்படுகின்றன என்று பொருள். எனவே, அடிக்கடி, ஸ்டார்ட் அப் பிரிவு சென்று, தேவைப்படாத புரோகிராம்கள் பட்டியலிடப்பட்டு இருந்தால், அல்லது முன்பு இணைக்கப்பட்டு, தற்போது தேவைப்படாத புரோகிராம் இருந்தால், இவற்றை நீக்கவும். இந்த வகையில் சிகிளீனர் புரோகிராம் உதவி டும்.

9. இன்பாக்ஸ் கிளீனிங்

கம்ப்யூட்டரில் மற்ற பிரிவுகளை ஒழுங்கு படுத்துகையில், உங்களுடைய இமெயில் இன் பாக்ஸ் உங்களுக்குப் பிரச்னையைத் தரலாம். உங்கள் தனிப்பட்ட வேலைகளுக்கு, அலுவல கப் பணிகளுக்கு, இந்த மின் அஞ்சல் இன் பாக்ஸ்களை நீங்கள் சார்ந்து இருக்கலாம். ஆனா லும், காலப் போக்கில் சேரும் தேவையற்ற மெயில்களை அழிக்க வேண்டும்.

முதலில் பல போல்டர்களை உருவாக்கி, மெயில்களைப் பிரித்து, இன்பாக்ஸை அமைக்க வேண்டும். பின்னர், இவற்றில் உள்ள தேவையற்ற மெயில்களை நீக்க வேண்டும். இதனால், எந்த எந்த மெயில்கள் எங்கு உள்ளன என்று உங்களுக்கும் தெரியவரும். அவற்றைக் கையாள்வதும் எளிதாகும்.

மின் அஞ்சல்களில், பலர் எந்த நியூஸ் லெட்டருக்கும் சரி எனத் தன் மின் அஞ்சலைக் கொடுப்பார்கள். பின்நாளில், அவற்றைத் திறந்து கூடப் பார்க்காமல், ட்ரேஷ் பெட்டிக்கு அனுப்புவார்கள். இதனால், உங்கள் மின்னஞ் சல் போல்டர் நிறையும். தேவையற்ற நியூஸ் லெட்டர், அலெர்ட் மெயில் சந்தாக்கள் ஆகிய வற்றை, அவ்வப்போது நீக்க வேண்டும்.

10. தானாகச் செயல்பட அமைக்கவும்

மேலே கூறப்பட்ட பல கிளீனிங் செயல்பாடு களைத் தானாகக் கம்ப்யூட்டரே மேற்கொள் ளும் வகையில் அமைக்க பல இலவச புரோகிராம்கள் உள்ளன. அவற்றை இன்ஸ் டால் செய்து பயன்படுத்துங்கள்.

பெர்சனல் கம்ப்யூட்டரைச் சுத்தமாக அனைத்து வழிகளிலும் வைத்து கொள்ள வேண்டும் என்பது உங்களுக்கு ஒரு தலைவலி யாக இருக்காது. இவை எல்லாவற்றையும் தினந்தோறும் பார்க்க வேண்டியது இல் லையே. குறிப்பிட்ட கால வரையறையில், மாதம் ஒருமுறை கூட, மேற்கொள்ளலாம். அல்லது, மேலே கூறியபடி, தானாகச் செயல்ப டும் புரோகிராம்களை செட் செய்திடலாம்.

ஜிமெயில் ட்யூனிங்

கூகுள் தரும் ஜிமெயில் தளம் அதன் பல வகை வசதிகளுக்குப் பெயர் பெற்றது. பெரும்பாலானவர்கள், இவற்றில் சில வற்றைக் கூட முழுமையாகப் பயன்ப டுத்த மாட்டார்கள். அடிப்படையில், தங்களுக்கு வரும் மெயில்களைப் பார்ப் பது, இணைப்புகளை டவுண்லோட் செய்வது, பதில் அஞ்சலை, தேவை எனில் இணைப்பு களுடன் அனுப்புவது என்ற அளவிலேயே செயல்படுவார்கள். இவற்றில் சில செட்டிங்ஸ் மேற்கொண்டால், சில அஞ்சல் செயல்பாடு கள், கூடுதல் பயன் தருபவையாகவும், விரை வில் மேற்கொள்ளப்படுவதாகவும் அமையும். அவற்றை இங்கு காணலாம்.

1. ஜிமெயில் இன்பாக்ஸ்

கூகுள் நிறுவனம் தன் ஜிமெயில் வாடிக்கை யாளர்களுக்கு ஏதேனும் ஒரு புதிய வசதியை அளிப்பது வழக்கம். இந்த வசதிகளே, அதன் வாடிக்கையாளர்களைத் தொடர்ந்து அதன் பக் கம் வைத்துள்ளது. புதிய அறிமுகங்கள் அவ் வளவாகப் பயன்படுத்தப்படவில்லை என்றால், அவற்றை எடுத்துவிடவும் அல்லது மற்றவற்றுடன் இணைக்கவும், கூகுள் தயங் காது. கூகுள் தந்துள்ள புதிய வசதி ஒன்று குறித்து இங்கு பார்க்கலாம்.

தற்போது கூகுள் ஜிமெயில் இன்பாக்ஸில் புதிய பிரிவுகளை வடிவமைத்து அளித்துள்ளது. அவை - primary, social, promotions, updates and forums ஆகும். இதில் ஏதேனும் உங்களுக்குத் தேவை இல்லை என நீங்கள் எண்ணினால், அதனை நீக்கிவிடலாம். இந்த வகை இன் பாக்ஸ் தோற்றத்தை நீங்கள் விரும்பிய வகையி லும் அமைக்கலாம். இதற்கு முதலில், மெயில் தளத்தின் திரையில் வலது மேல் மூலையில் உள்ள, செட்டிங்ஸ் (Settings) பட்டனை அழுத் தவும். அடுத்து "Configure inbox" என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இங்கு பாப் அப் ஆகி வரும் பட்டியலில், தேவையற்ற பாக்ஸ்களுக்கான டேப்களுக்கான டிக் அடையாளத்தினை எடுத் துவிடவும். பின் சேவ் செய்திடவும்.



2. காலண்டரில் நிகழ்வுகள் இணைப்பு

நீங்கள் ஜிமெயில் பயன்படுத்தி, நிகழ்ச்சி களை ஒருங்கிணைக்கும் வேலையினை மேற் கொள்பவராக இருந்தால், அவற்றை கூகுள் காலண்டரில் இணைப்பது மிக எளிதான ஒன் றாக இப்போது அமைக்கப்பட்டுள்ளது.

மின்னஞ்சல்களில் உள்ள தேதி மற்றும் நேரம் தற்போது அடிக்கோடிடப்படுகின்றன. உங்கள் திட்டமிடலை முன் கூட்டியே பார்க்க விரும்பி னால், இதில் ஏதாவது ஒன்றின் மேல் கர்சரைக் கொண்டு செல்லவும். நீங்கள் விரும்பினால், தேதி மற்றும் நேரத்தினை மாற்றலாம். பின்னர், "Add to Calendar" என்பதில் கிளிக் செய்து உங் கள் திட்டமிடலில் அதனை இணைக்கலாம். உங்கள் காலண்டரில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த பதிவில், உங்கள் பழைய மூல அஞ்ச லுக்கு ஒரு லிங்க் ஏற்படுத்தப்படும். இதனால், இந்நிகழ்வு சார்ந்த அனைத்தையும் எளிதாகப் பார்வையிட முடியும்.

3. விருப்பமில்லையேல் முடக்கிவிடலாம்

குறிப்பிட்ட மின் அஞ்சல் சார்ந்து பலர் தங் கள் கருத்துக்களைப் பதிவு செய்திடுகையில், அவை தொடர்ந்து நீண்டு கொண்டே போகும். ஒரு கட்டத்தில், தொடக்க நிலையில் எழுதப் பட்ட கருத்துக்குச் சம்பந்தமில்லாத கருத்துகள்

பதிவு செய்யப்படலாம். உங்களுக்கு அதில் விருப்பமில்லாமல் இருக்கலாம். இருப்பினும், அந்த அஞ்சல் சங்கிலித் தொடராக உங்கள் பெட்டியில் வந்து கொண்டே இருக்கும். இதனை உங்கள் மெயில் பாக்ஸில் வராமல் இருக்க, கூகுள் ஒரு வசதியினைத் தந்துள்ளது. "Mute conversations" என்னும் அந்த வசதியினை இயக்கி விட்டால், தொடர் அஞ்சல்கள் வராது.

ஒரு அஞ்சல் தொடரினை முடக்க நினைத்தால், அதன் அருகே உள்ள சிறிய சதுரப் பெட்டியில் கிளிக் செய்து, முதலில் அதனைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து "More" என்பதில்



உள்ள கீழ் விரி மெனுவினை விரிக்கவும். இதில் காணப்படும் "Mute" என்ற ஆப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். இதனைத் தேர்ந்தெடுத்தவுடன், இந்த தகவல் சார்ந்த அனைத்து மெயில்களும் நீக்கப்பட்டு, ஆர்க்கிவ் எனப்படும் கிடங்கில் வைக்கப்படும். எனவே "All Mail" என்ற லேபிள் மீது கிளிக் செய்தால், இவற்றை எப்போதும் நீங்கள் காணலாம். இதில் மட்டும் புதியதாக "Muted" என்ற லேபிள் காணப்படும். பின் ஒரு நாளில், இதனைத் தொடர்ந்து நீங்கள் பெற விரும்பினால், மீண்டும் இதனைத் தேர்ந்தெடுத்து, "Move to Inbox" என்பதில் கிளிக் செய்திடவும்.

4. பெரிய பைல்களுக்கு ஜி ட்ரைவ் பயன்படுத்துக

ஜிமெயில், அஞ்சலுடன் இணைக்கும் பைல்களைப் பொறுத்தவரை குறிப்பிட்ட அளவிற்கு மேல், அந்த பைல் அல்லது, இணைக்கப்படும் மொத்த பைல்களின் அளவு இருந்தால், எந்த பைல் அளவினை மீறுகிறதோ, அதனை ஏற்றுக் கொள்ளாது. நமக்குக் கட்டாயம் பைலை அனுப்பியாக வேண்டிய சூழ்நிலையில் இருப்போம். இது போன்ற வேளைகளில் கூகுள் ட்ரைவ் பயன்படுத்தி அனுப்பலாம். இதனைப் பயன்படுத்தி, 10 ஜிபி அளவிலான பைலை அனுப்ப முடியும். இது வழக்கமான பைல் அளவினைக் காட்டிலும் 400 மடங்கு



அதிகமாகும்.

மிகப் பெரிய பைலை அனுப்பு முன்னர், அதனை ஜி ட்ரைவில் அப்லோட் செய்திட வேண்டும். அதன் பின்னர், ஜிமெயில் தளத்தில், Compose விண்டோவில் Drive ஐகான் மீது கிளிக் செய்திட வேண்டும். பின்னர், நாம் அனுப்ப விரும்பி, கூகுள் ட்ரைவிற்கு ஏற்கனவே அனுப்பிய பைலைக் கிளிக் செய்திட வேண்டும். நீங்கள் அனுப்பிய பைலுக்கு, அதனைப் பெறுபவராக நீங்கள் தேர்ந்தெடுத்தவர் அணுக முடியுமா எனப் பார்க்கும். இல்லையேல் சில செட்டிங்ஸ் மாற்ற கூகுள் உங்களைக் கேட்டுக் கொள்ளும். இவற்றை மாற்றி அமைத்த பின்னர், உங்கள் பைல் அவருக்குச் செல்லும். அவர் அஞ்சலைப் பார்க்கையில், கூகுள் ட்ரைவிலிருந்து, குறிப்பிட்ட பைல் அவர் கம்ப்யூட்டரில் டவுண்லோட் ஆகும்.

தொழில் நுட்பம்

Windows : விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டம். இன்று உலகின் பெரும்பாலான பெர்சனல் கம்ப்யூட்டர்களில் பயன்படுத்தப்படும் ஆப்பரேட்டிங் சிஸ்டம். டாஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்திற்குப் பின் மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் வழங்கப்பட்டது. தொடர்ந்து இதில் பல வசதிகள் தரப்படுகின்றன. கிராபிக்ஸ் அடிப்படையில் இதன் யூசர் இன்டர்பேஸ் அமைக்கப்பட்டிருப்பதால் பயன்படுத்த எளிதானது.

இணைய இணைப்பு அறுந்து போனால்?

இணைய இணைப்பு என்பது தற்போது கம்ப்யூட்டர் இயங்கும் நேரம் முழுமைக்கும் தேவையான ஓர் சாதனமாகக் கருதப்படுகிறது. கிளவ்ட் கம்ப்யூட்டிங் முறை தொடர்ந்து பெருகி வரும் நிலையில், மைக்ரோசாப் விண்டோஸ் தன் புதிய ஆப்பரேட்டிங் சிஸ்டங்களை, இணைய இணைப்பில் உள்ள அக்கவுண்ட் சார்ந்து அமைத்துள்ள நிலையில், இணைய இணைப்பு இருந்தால் தான், பொருள் பொதிந்த கம்ப்யூட்டர் பயன்பாடு கிடைக்கும் என்ற நிலை உருவாகியுள்ளது. ஆனால், இணைய இணைப்பு திடீர் திடீர் என விட்டுப் போவது, நாம் அடிக்கடி சந்திக்கும் பிரச்னை ஆகிறது. குறிப்பாக கம்பி வழி இணைப்பு கொண்டோருக்கு இது தொடர்ந்து வரும் பயமுறுத்தலாகவே உள்ளது. இணைய இணைப்பு இல்லாமல் போவது என்பது, நமக்கு தும்மல் வருவது போல ஆகிவிட்டது. தும்மலையாவது ஒரு சில காரணங்களுக்காகக் கட்டாயம் வரும் என எதிர்பார்க்கலாம். ஆனால் இன்டர்நெட் இணைப்பு எப்போது கட் ஆகும்; மீண்டும் எப்போது வரும் எனச் சொல்ல முடியாது. பொதுவாக இது போல கட் ஆனால், உடனே கம்ப்யூட்டரை ரீபூட் செய்து பார்க்கிறோம். நமக்கு இன்டர்நெட் சர்வீஸ் வசதி தரும் நிறுவனத்தைத் திட்டித் தீர்க்கிறோம். கட்டிய காசு தீர்ந்தவுடன் முதலில் இந்த நிறுவனத்தை முடித்து , வேறு ஒரு நிறுவனத்தின் சேவைக்கு மாற்றினால் தான் நிம்மதி என்கிறோம். இருப்பினும் கீழ்க்காணும் விஷயங்களையும் செய்து பார்க்கலாமே!

1. வேறு எதனையும் செய்வதற்கு முன்னால், உங்கள் மோடத்தினை மீண்டும் ரீபூட் செய்திடுங்கள். ஒன்றுமில்லை, அதற்கு வரும் மின்சக்தியை நிறுத்தி சில நொடிகள் கழித்து மீண்டும் ஆன் செய்திடுங்கள். பின் உங்கள் ரௌட்டரை ஆன் செய்திடுங்கள். இவற்றில் ஏதேனும் ஒன்றினைப் பயன்படுத்துவோரே அதிகம். அவர்கள் அதனை மட்டும் ரீபூட் செய்தால் போதும்.

2. உங்களுக்கு ரௌட்டர் வழி இணைப்பு இல்லை என்றால் கம்ப்யூட்டரை ரீ பூட் செய்திடுங்கள். அதன் பின் கேபிள் மோடத்தினை பூட் செய்திடுங்கள்.

3. மோடத்தில் விளக்குகள் எரிந்து டேட்டா பரிமாற்ற விளக்குகள் சிமிட்டத் தொடங்கினால் இன்டர்நெட் இணைப்பு வந்துவிட்டது என்று பொருள். அனைத்து விளக்குகளும் எரியவில்லை என்றால் உங்கள் இணைப்பிற்கான கேபிள்கள் அனைத்தும் சரியாகப் பொருத்தப்பட்டிருப்பதனை



உறுதி செய்திடுங்கள். அதன் பின் உங்களுக்கு இணைப்பு தந்துள்ள நிறுவனத்தின் கஸ்டமர் சர்வீஸ் எண்ணுக்கு போன் செய்திடுங்கள். அதற்கு முன் அவரிடம், எது போன்ற குறை என்று சொல்ல வேண்டும் என்பதனைத் தீர்மானித்து வைத்துக் கொள்ளுங்கள். பின் குறையினைத் தெளிவாக எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.

4. புதிய பிரவுசர் விண்டோ ஒன்று திறந்து கொள்ளுங்கள். பின் www.dinamalar.com என்று தள முகவரி கொடுத்துப் பாருங்கள். தினமலர் வெப்சைட் கிடைத்தால், நல்லது. இல்லை என்றால் தொடர்ந்து அடுத்து தரப்பட்டுள்ள செயல்முறைகளை மேற்கொள்ளுங்கள்.

5. ஸ்டார்ட் அழுத்திக் கிடைக்கும் கட்டத்தில், ரன் பாக்ஸில் cmd என டைப் செய்து என்டர் தட்டவும். உங்கள் மானிட்டர் திரையில், கறுப்பு பாக்ஸில் டாஸ் இயக்கம் கிடைக்கும். அங்கு துடிக்கும் கர்சரில் Ipconfig /all என டைப் செய்திடுங்கள். உங்களுடைய default gateway மற்றும் DNS servers அறிந்து கொள்ளுங்கள். பின் இவற்றிற்கு கட்டளை கொடுத்துப் பாருங்கள். பதில் கிடைக்கிறதா?

6. இவை அனைத்தும் உங்கள் இணைப்பைத் தராவிட்டால், traceroute எனக் கொடுத்துப் பார்த்தால் எங்கு பிரச்சினை ஏற்பட்டு இணைப்பு அறுந்து போகிறது என்று தெரியும். traceroute என்பது ஒரு கட்டளைச் சொல். உங்கள் கம்ப்யூட்டரிலிருந்து தகவல்கள் ஒரு பாக்கெட்டாக எங்கெங்கு செல்கின்றன என்று காட்டச் சொல்லும் ஒரு கட்டளை. traceroute எனக் கொடுத்து பின் ஒரு ஸ்பேஸ் கொடுத்து உங்களுக்குச் சிக்கலைத் தரும் தளத்தின் முழு முகவரியைத் தர வேண்டும். பொதுவாக ஒரு தளம் கிடைக்கவில்லை என்றால் இது போல traceroute மற்றும் ping கட்டளைகள் கொடுத்துப் பார்த்துவிட்டுப் பின் இன்டர்நெட் சேவை தரும் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளுங்கள். முதலில் உங்கள் யூசர் நேம் கொடுக்கவும். அவர்கள் உங்கள் அக்கவுண்ட்டினைச் சார்ந்த மேலும் சில தகவல்களை உறுதி செய்வார்கள். அவர்கள் கூறும் செயல்பாடுகளையும் பொறுமையாக மேற்கொண்டு, பதில் கொடுங்கள். நிறுவனத்தின் சர்வரில் பிரச்சினை இருந்தால் அவர்கள் உடனே அதனை உங்களுக்குத் தெரிவித்து, உங்கள் குறை எந்த எண்ணில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், எத்தனை மணி நேரத்திற்குள் அது சரி செய்யப்படும் எனவும் கூறுவார்கள். பொறுமையாகக் காத்திருக்கவும். தொடர்ந்து சரி ஆகவில்லை என்றால், மீண்டும் வாடிக்கையாளர் சேவை மையத்தினைத் தொடர்பு கொண்டு நினைவு படுத்தவும். நிச்சயம் இணைப்பு சரி செய்யப்படும்.

இந்தியாவைத் தேடுங்கள் - கூகுள் அழைக்கிறது

கூகுள் இந்தியா நிறுவனம் அண்மையில், 'Start Searching India' என்னும் இயக்கத்தினைத் தொடங்கியுள்ளது. சென்ற ஜூலை 30 அன்று, போபால் நகரில் இது தொடங்கி வைக்கப்பட்டது.

கூகுள் தரும் தேடல் சாதனம் மூலம், இணையத்தின் அதிக பட்ச பலனை, இணையம் பயன்படுத்துவோருக்குத் தருவதற்காக, இந்த இயக்கம் தொடங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"இணையம் என்பது இப்போது படித்தவர்களும், பணி செய்பவர்களுக்கானது மட்டுமல்ல. பலதரப்பட்ட நிலைகளில் வாழ்க்கையை நடத்தி வரும் மக்களின், மாறுபட்ட தேவைகளை நிறைவேற்றி, அனைவரின் வாழ்க்கையைச் சிறப்பாக மேம்படுத்தும் ஒரு சாதனமாக மாறி வருகிறது. எனவே, அதற்கெனச் சிறப்பாகச் செயல்படும் வகையில் கூகுள் தன் தேடல் சாதனத்தினைச் செம்மைப் படுத்தித் தருகிறது" என, கூகுள் இந்தியா நிறுவனத்தின் மார்க்கெட்டிங் பிரிவு இயக்குநர் சந்தீப் மேனன் அறிவித்துள்ளார்.

மேம்படுத்தப்பட்ட தேடல் சாதனம், தேடலுக்கான முடிவுகளைத் தருவதில் செலவிடும் நேரத்தைக் குறைத்துள்ளது. தேடலுக்கான சரியான துல்லியமான முடிவுகளைக் காட்டுகிறது. தேடுபவரின் தேவைகளைச் சரியாகப் புரிந்து செயல்படுகிறது. இது தொடர்ந்து மேம்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.



விண்டோஸ் லோகோ கீ பயன்பாடு

விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில், அதன் சின்னத்துடன் ஒரு கீ, கீ போர்டில் தரப்பட்டிருக்கும். இதனைத் தனியாகவும், மற்ற கீகளுடனும் இயக்கி சில செயல்பாடுகளை மேற்கொள்ளலாம். கீழே அந்த ஷார்ட்கட் கீகளும் அவற்றிற்கான செயல்பாடுகளும் தரப்பட்டுள்ளன. இவற்றில் சிலவற்றை நீங்கள் அடிக்கடி மேற்கொள்ளும் சூழ்நிலைகளும் உங்கள் செயல்பாட்டில் இருக்கலாம். எனவே கவனத்துடன் இவற்றை நினைவில் கொண்டு பயன்படுத்துங்கள்.

விண்டோஸ் லோகோ கீ தனியாக – ஸ்டார்ட் மெனு திறக்கவும் மூடவும்.

Pause கீயுடன் – சிஸ்டம் ப்ராப்பர்ட்டீஸ் டயலாக் பாக்ஸ் திறக்கப்படும்.

D கீயுடன் – டெஸ்க்டாப் காட்டப்படும். அப்போது இயங்கும் புரோகிராம்கள் அனைத்தும் சுருக்கப்பட்டு டாஸ்க்பாருக்குச் செல்லும். மீண்டும் அழுத்த, புரோகிராம்களின் விண்டோ கிடைக்கும்.

M கீயுடன் – அனைத்து விண்டோக்களும் சுருக்கப்பட்டு டாஸ்க்பாருக்குச் செல்லும்.

Shift + Mகீகளுடன் – சுருக்கப்பட்ட புரோகிராம் விண்டோக்கள் திரைக்கு மீண்டும் வரும்.

E கீயுடன் – கம்ப்யூட்டர் திறக்கப்படும்.

F கீயுடன் – பைல் அல்லது போல்டர் தேட

Ctrl + F கீகளுடன்– நெட்வொர்க்கில் இருந்தால், கம்ப்யூட்டரைத் தேட

L கீயுடன் – கம்ப்யூட்டரை பூட்டி வைக்கும். அல்லது பயனாளரை மாற்றும்.

R கீயுடன் – Run டயலாக் பாக்ஸ் திறக்கப்படும்.

Tகீயுடன் – டாஸ்க்பாரில் உள்ள புரோகிராம்களுக்கு ஒவ்வொன்றாகச் செல்லும்.

நம்பர் கீயுடன் – டாஸ்க் பாரில் பின் செய்யப்பட்ட புரோகிராம்களுக்கு, அதன் வரிசையில் அந்த எண் உள்ள புரோகிராம் செல்லும்.

Shift + நம்பர் கீயுடன் – புரோகிராமின் இன்னொரு இயக்கம் திறக்கப்படும். எந்த எண் கீ பயன்படுத்தப் படுகிறதோ, அந்த எண் வரிசையில் உள்ள புரோகிராம் திறக்கப்படும்.

Ctrl + நம்பர் கீயுடன் – எண் கீ அடிப்படையில், டாஸ்க்பாரில் உள்ள வரிசைப்படி, இறுதியாக இயங்கிக் கொண்டிருந்த புரோகிராமிற்குச் செல்லும்.

Alt + நம்பர் கீயுடன் - எண் கீ அடிப்படையில், வரிசையில் அந்த எண் உள்ள புரோகிராமினை இயக்க ஜம்ப் லிஸ்ட் திறக்கப்படும்.

Tab கீயுடன் – டாஸ்க் பாரில் உள்ள புரோகிராம்கள் ஒவ்வொன்றாகச் செல்லும். இதற்கு Aero Flip 3D பயன்படுத்தப்படும்.

Ctrl + Tab கீயுடன் – டாஸ்க் பாரில் உள்ள புரோகிராம்கள் ஒவ்வொன்றாக அம்புக் குறி கீ பயன்படுத்திச் செல்லும். இதற்கு Aero Flip 3D பயன்படுத்தப்படும்.

Ctrl+B கீயுடன் – நோட்டிபிகேஷன் ஏரியாவில் மெசேஜ் காட்டிய புரோகிராமிற்கு மாறும்.

Spacebar கீயுடன் – டெஸ்க்டாப் பிரிவியூ கிடைக்கும்.

Up Arrow கீயுடன் – விண்டோ பெரிதாக்கப்படும்.

Left Arrow கீயுடன் – திரையின் இடது பக்கம் விண்டோ பெரிதாக்கப்படும்.

Right Arrow கீயுடன் – திரையின் வலது பக்கம் விண்டோ பெரிதாக்கப்படும்.

Down Arrow கீயுடன் – இயங்கும் விண்டோ மினிமைஸ் செய்யப்படும்.

Home கீயுடன் – இயங்கும் விண்டோ தவிர மற்ற அனைத்தும் மினிமைஸ் செய்யப்படும்.

Shift + Up Arrow கீயுடன் – விண்டோ திரையின் மேல் கீழாக இழுத்து வைக்கப்படும்.

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவின் விண்டோஸ் போன் அப்ளிகேஷன்

அனைத்து வங்கி நிதி பரிவர்த்தனை களையும், தனி நபர்கள், தங்கள் மொபைல் போன்களிலேயே மேற்கொள்ளும் பழக்கம் அதிகரித்து வருகிறது. இந்த வகையில், அண்மையில், ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா, தன் வாடிக்கையாளர்களின் வசதிக்காக, விண்டோஸ் சிஸ்டம் இயங்கும் மொபைல் போன்களில் பயன்படுத்த, State Bank Freedom app என்ற அப்ளிகேஷன் ஒன்றை இலவசமாகத் தரத் தொடங்கியுள்ளது. இந்த அப்ளிகேஷன் மூலம், உங்கள் அக்கவுண்ட்டில் லாக் இன் செய்து, நிதி பரிமாற்றம், பில்களுக்கான தொகையினைக் கட்டுதல், ட்ரெயின் டிக்கட் வாங்குதல் போன்ற பல வேலைகளை மேற்கொள்ளலாம். நம் அக்கவுண்ட்டில் மீதம் இருக்கும் தொகை மற்றும் சிறிய அளவிலான நம் அக்கவுண்ட் அறிக்கை ஆகியவற்றைப் பெறலாம். செக் புக் தேவைக்கான விண்ணப்பத்தினை அனுப்பலாம். இன்சூரன்ஸ் பிரிமியம், தொலைக்காட்சி சேனல்களுக்கான கட்டணம் போன்றவற்றைச் செலுத்தலாம். மொபைல் டாப் அப் செலுத்தலாம்.

இந்த அப்ளிகேஷனை இலவசமாகப் பெற http://www.windowsphone.com/en-in/store/app/state-bank-freedom/89d44354-b90a-463d-8dae-08a5111c37fd என்ற முகவரியில் உள்ள தளம் செல்லவும்.

இதே அப்ளிகேஷன், 2011 ஆம் ஆண்டு, ஆண்ட்ராய்ட் சிஸ்டங்களில் இயங்கும் வகையில் வெளியிடப்பட்டது. பின்னர், 2012ல், ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன்களில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டது. தற்போது விண்டோஸ் போன் சிஸ்டம் உள்ள மொபைல் போன்களுக்கென வழங்கப் பட்டுள்ளது. விண்டோஸ் போன் 7.5 மற்றும் அதன் பின்னர் வந்த இதே ஆப்பரேட்டிங் சிஸ்டங்கள் இயங்கும் மொபைல் போன்களில் இதனை இயக்கலாம்.





எக்ஸெல் டிப்ஸ்

டேப்பின் பரிமாணத்தை மாற்ற

எக்ஸெல் ஒர்க் ஷீட்டின் டேப்கள் அனைத்தும் சிறியதாகவே தரப்பட்டுள்ளன. மாறா நிலையில் தரப்படும் இவற்றின் பரிமாணத்தை நாம் மாற்றலாம்.

நீங்கள் பயன்படுத்துவது விண்டோஸ் 7 எனில், கீழ்க்கண்டபடி செயல்படவும்.

1. Start மெனுவில் இருந்து Control Panel திறக்கவும். 2.அடுத்து Appearance & Personalization என்பதில் கிளிக் செய்திடவும். 3. Personalization பிரிவில் Change Window Glass Color என்பதில் கிளிக் செய்திடவும். 4. அடுத்து Advanced Appearance Settings என்பதில் கிளிக் செய்திடவும். 5. அடுத்து Item என்ற ட்ராப் டவுண் பாக்ஸில், Scrollbar என்பதைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து, நீங்கள் விரும்பும் அளவில் டேப் அமைய, அதற்கான அளவுகளைத் தேர்ந்தெடுத்து அமைக்கவும். பெரிய அளவில் என்



றால், டேப்களும் பெரியதாக அமையும். பின்னர் Apply மற்றும் OK கிளிக் செய்து வெளியேறவும்.

இப்போது எக்ஸெல் ஒர்க்ஷீட் டேப்களின் அளவு நீங்கள் செட் செய்தபடி அமையும். இதில் என்ன பிரச்னை என்றால், உங்கள் ஆபீஸ் தொகுப்பில் உள்ள புரோகிராம்களில் தரப்பட்டுள்ள ஸ்குரோல் பார்களின் அளவும் மாற்றப்பட்டிருக்கும். சற்று பெரியதாக உள்ள ஸ்குரோல்பாரினை நீங்கள் பயன்படுத்தப் பழக வேண்டியதிருக்கும்.

நீங்கள் பயன்படுத்துவது விண்டோஸ் எக்ஸ்பி எனில், கீழ்க்கண்டவாறு செயல்படவும்.

1. Start மெனுவில் இருந்து Control Panel திறக்கவும். 2. இதில் Display என்பதில் டபுள் கிளிக் செய்திடவும். 3. இங்கு Appearance என்ற டேப்பில் கிளிக் செய்திடவும். 4. பின்னர், கீழாக வலது புறம் உள்ள Advanced என்பதில் கிளிக் செய்திடவும். 5. அடுத்து Item என்ற ட்ராப் டவுண் பாக்ஸில், Scrollbar என்பதைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து, நீங்கள் விரும்பும் அளவில் டேப் அமைய, அதற்கான அளவுகளைத் தேர்ந்தெடுத்து அமைக்கவும். பெரிய அளவில் என்றால், டேப்களும் பெரியதாக அமையும். பின்னர் Apply மற்றும் OK கிளிக் செய்து வெளியேறவும்.

எந்த செல்லில் கர்சர் உள்ளது?

எக்ஸெல் ஒர்க் புக் ஒன்று மிகப் பெரியதாக இருந்தால், சில வேளைகளில் அதன் அடுத்த அடுத்த செல்களுக்கு, மானிட்டர் திரை அளவைத் தாண்டிச் செல்ல வேண்டியதிருக்கும். அப்போது எந்த செல்லில் நாம் கர்சரை வைத்துச் செயல்பட்டுக் கொண்டிருந்தோம் என்பது மறந்து போகும். கர்சர் அங்கு துடித்துக் கொண்டிருந்தாலும், திரை மேலும் கீழுமாகச் சென்றதால், எங்கு செயல்படும் அந்த செல் உள்ளது என்று அறியாமல், ஸ்குரோலிங் பார் அல்லது அம்புக் குறி கீகளை அழுத்தியவாறு தேடுவோம்.

இந்த பிரச்னைக்கு ஒரு சிறிய தீர்வு வழி ஒன்று உள்ளது. ஒன்றல்ல, இரண்டு வழிகள் உள்ளன. முதல் வழி சற்று சுற்றுவழி. உங்களுக்கு நீங்கள் இருந்த செல் அட்ரஸ் அல்லது அதன் பெயர் தெரிந்திருக்க வேண்டும். தெரிந்திருந்தால், [Ctrl]+G கீகளை அழுத்தி, பின்னர் செல் எண் அல்லது பெயர் டைப் செய்து என்டர் அழுத்த, அந்த செல் உங்களுக்குக் கிடைக்கும். ஆனால், நாம் பெரும்பாலும், செல்லின் எண் அல்லது பெயரை நினைவில் வைத்திருக்க மாட்டோம். அந்த சூழ்நிலையில், கண்ட்ரோல் + பேக் ஸ்பேஸ் அழுத்துங்கள். ஜில் என்று, நீங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்த செல்லுக்கு எடுத்துச் செல்லப்படுவீர்கள்.

இதனைச் செயல்படுத்த, நீங்கள் கர்சரை வைத்திருக்கும் செல், மானிட்டர் திரையில் இருக்கக் கூடாது. அப்போதுதான், அந்த செல் கிடைக்கும்படி, மானிட்டரில் திரைக் காட்சி மாற்றப்படும். கர்சர் இருக்கும் செல், மானிட்டர் திரையில் இருந்தால், நீங்கள் கண்ட்ரோல் மற்றும் பேக் ஸ்பேஸ் அழுத்துகையில், திரைக் காட்சி அப்படியே தான் இருக்கும். ஏனென்றால், அந்த செல் தான் உங்கள் முன் காட்டப்படுகிறதே.

எனவே இந்தக் கட்டளையினை சோதித்துப் பார்க்க விரும்பினால், செல் ஒன்றில் கர்சரை வைத்துவிட்டு, பின் ஸ்குரோல் பார் மூலம் அல்லது வேறு வழிகளில் சற்றுக் கீழாகச் செல்லுங்கள். அதன் பின் இந்தக் கட்டளை கொடுத்துப் பாருங்கள்.

வேர்ட் டிப்ஸ்

சொற்களை எண்ணிச் செயல்பட

எம்.எஸ். ஆபீஸ் தொகுப்பு 2003ஐ இன்னும் பயன்படுத்துகிறீர்களா! அதன் வேர்ட் தொகுப்பில் ஏதேனும் ஒரு டெக்ஸ்ட்டை உருவாக்குகையில், அதில் உள்ள சொற்களின் எண்ணிக்கையைச் சரியாகத் தெரிய வேண்டி Word Count என்னும் வசதியைப் பயன்படுத்தலாம். எந்த ஒரு டூல் பாரில் ரைட் கிளிக் செய்தாலும் அதில்



Word Count என்ற வசதி கிடைக்கும். ஒரு முறை கூட்டிப் பார்த்து விடை கிடைத்த பின்னர் மீண்டும் கூட்டிப் பார்க்க வேண்டும் என விரும்பினால் Recount என்ற பட்டன் கிடைக்கும்.

டெக்ஸ்ட் எதனையும் தனியாக செலக்ட் செய்யாத பட்சத்தில் முழு டெக்ஸ்ட்டின் சொற்களும் மீண்டும் எண்ணப்பட்டு விடை கிடைக்கும். உங்களுக்கு எத்தனை சொற்கள் என்று சொல்கின்ற சிறிய விண்டோவில் உள்ள சிறிய தலை கீழ் அம்புக் குறியினைக் கிளிக் செய்தால் மேலும் 5 விதமான விடைகள் இருக்கும். இடைவெளி இல்லாமல் எத்தனை கேரக்டர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன, இடைவெளி யுடன் உள்ள கேரக்டர்களின் எண்ணிக்கை என்ன, எத்தனை வரிகள், மற்றும் எத்தனை பக்கங்கள் என்ற விவரங்கள் காட்டப் படும். இது ஒரு புளோட்டிங் டூல் பாராக இருக்கும். இதனை மானிட்டரில் எந்த பகுதியில் வேண்டுமென்றாலும் இழுத்து வைத்துக் கொள்ளலாம். இந்த வசதியினை நீங்கள் அடிக்கடி பயன்படுத்துபவராக இருந்தால் இந்த டூல் பாரினை இழுத்துச் சென்று மேலே உள்ள டூல்பாருடன் இணைத்து விட்டால் அது அங்கேயே தங்கிவிடும்.

வேர்ட் 2007 பயன்படுத்தினால், எந்த டூலையும் நீங்கள் தேர்ந்தெடுக்கத் தேவையில்லை. டாகுமெண்ட்டின் கீழாக உள்ள அதன் ஸ்டேட் டஸ் பாரில், டாகுமெண்ட்டில் எத்தனை சொற்கள் உள்ளன என்பது எப்போதும் காட்டப் பட்டுக் கொண்டே இருக்கும். நீங்கள் குறிப்பிட்ட டெக்ஸ்ட்டைத் தேர்ந்தெடுத்து, அவை மொத்தம் எத்தனை என்று அறிய விரும்பினால், அங்கேயே அதுவும் காட்டப்படும். டாகுமெண்ட்டில் உள்ள மொத்த சொற்களில், எத்தனை சொற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்று காட்டப்படும்.

பாரா வடிவமைப்பை மற்றவற்றிற்கு அமைக்க

வேர்ட் தொகுப்பில் கூடுதல் பயன்களைத் தரும் ஒரு சாதனம் பார்மட் பெயிண்டர் என்னும் வசதி ஆகும். இதன் மூலம் ஒரு பாரா பார்மட்டினை இன்னொரு பாராவிற்கு மாற்றலாம். முதலில் எந்த பாராவின் பார்மட்டினைக் காப்பி செய்து இன்னொரு பாராவிற்கு மாற்ற விரும்புகிறீர்களோ அதனை செலக்ட் செய்திடவும். பின் டூல் பாரில் பார்மட் பெயிண்டர் என்ற பிரிவில் கிளிக் செய்திடவும். பின் எந்த பாராவில் இந்த பார்மட்டினைச் செலுத்த வேண்டுமோ அதனை தேர்ந்தெடுத்து கிளிக் செய்திடவும். இதே பார்மட்டைத் தொடர்ந்து காப்பி செய்திட பார்மட் பெயிண்டரில் டபுள் கிளிக் செய்திட வேண்டும். மீண்டும் பார்மட் பெயிண்டரை குளோஸ் செய்திடும் வரை இந்த பார்மட் தொடர்ந்து காப்பி ஆகும். குளோஸ் செய்திட பார்மட் பெயிண்டரில் இன்னொரு முறை கிளிக் செய்திட வேண்டும். அல்லது எஸ்கேப் கீயினை அழுத்த வேண்டும்.

வேர்ட் 2007 தொகுப்பில், பார்மட் பெயிண்டர் பெற, ஹோம் டேப்பில், கிளிப் போர்ட் பிரிவில், வலது மூலையில் இருக்கும் பார்மட் பெயிண்டர் சென்று, மேலே காட்டப்பட்டுள்ள மாற்றங்களைச் செயல்படுத்தலாம். இந்த ஐகான், பெயிண்ட் பிரஷ் ஐகானாகக் கிடைக்கும்.

மெனுவிலிருந்து வெளியே வர

வேர்டில் ஒரு மெனுவினைக் கிளிக் செய்து திறந்துவிட்டீர்கள். பின்னர் அது வேண்டாம் என்று எண்ணி அதனைக் கேன்சல் செய்து மீண்டும் டாகுமெண்ட்டில் கர்சர் இருந்த இடத்திற்கு வர எண்ணுகிறீர்கள். என்ன செய்யலாம்? இதற்கு மூன்று வழிகள் உள்ளன.

1. எஸ்கேப் கீயை இரண்டு முறை தட்டவும். முதல் முறையில் மெனு மறையும். ஆனால் கர்சர், மெனு மீதாக இருக்கும். இரண்டாவது முறை தட்டுகையில் கர்சர் டாகுமெண்ட்டில் விட்ட இடத்தில் நிற்கும்.

2. மெனுமீது மீண்டும் ஒரு முறை கிளிக் செய்தால் மெனு மறையும்.

3. மெனுவிற்கு வெளியே டாகுமெண்ட்டில் எங்கு கிளிக் செய்தாலும் மெனு உடனே மறைந்துவிடும்.

இந்த வார இணைய தளம்

போட்டோக்களைக் காப்பாற்ற புதிய தளம்

மொபைல் போன் மற்றும் டிஜிட்டல் கேமராக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் இந்நாட்களில், நாம் அதிகமான எண்ணிக்கையில் போட்டோக்களை எடுத்து, அவற்றைக் கம்ப்யூட்டரில் பதிந்து வைக்கிறோம். இதனால், ஹார்ட் டிஸ்க் இடம் அதிகம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும், இந்த ஹார்ட் டிஸ்க் திடீரென இயங்காமல் போனால், இந்த போட்டோக்கள் கிடைக்காது. இதற்கான ஒரு தீர்வாக, பல இணைய தளங்கள், க்ளவுட் கம்ப்யூட்டிங் முறையில், இவற்றைப் பதிந்து வைத்துப் பயன்படுத்திட டிஸ்க் இடம் தருகின்றன. அந்த வகையில் அண்மையில் பார்த்த ஓர் இணைய தளம் picturelife. இதன் முகவரி https://picturelife.com/ இந்த தளத்தில் நம் போட்டோக்களைப் பத்திரமாக பதிந்து வைக்கலாம்.

இந்த தளத்தில் நுழைந்து, நீங்கள் தொடர்ந்து பயன்படுத்தி வரும் மின் அஞ்சல் முகவரியினையும், அதற்கான பாஸ்வேர்டையும் கொடுத்து அக்கவுண்ட் தொடங்கவும். அடுத்து Continue மற்றும் Next Step பட்டன்களைக் கிளிக் செய்திடவும். உடனே, உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள போட்டோக்களை பேக் அப் செய்திடும் வேலைக்கு நீங்கள் அழைத்துச் செல்லப்படுவீர்கள். Start Backing Up Your Photographs என்ற பட்டனை நீங்கள் கிளிக் செய்தவுடன், ஒரு செட் அப் பைல் டவுண்லோட் ஆகும். இதனை இயக்கி, படங்களை ஒருங்கிணைக்கும் Picturelife Sync அப்ளிகேஷனை இன்ஸ்டால் செய்திட வேண்டும்.

இது செயல்படத் தொடங்கியவுடன், உங்கள் அக்கவுண்ட்டில் நுழைந்து, நீங்கள் ஏற்கனவே கொடுத்த தகவல்களை, உறுதி செய்வதற்காகக் கொடுத்து, எந்த பதிப்பினை நீங்கள் பயன்படுத்த விரும்புகிறீர்கள் என்பதனையும் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த தளம் இலவசமாக 5 ஜிபி வரையிலான பைல் சேவ் செய்திட இடம் தருகிறது. இந்த இடத்தைப் பயன்படுத்தி, ஏறத்தாழ 2,000 போட்டோக்களை சேவ் செய்து வைத்திடலாம். எந்த பதிப்பு எனத் தேர்ந்தெடுத்தவுடன், உங்கள் கம்ப்யூட்டரில் போட்டோக்கள் மற்றும் படங்கள் உள்ள போல்டரைக் குறிப்பிட்டுக் காட்டிவிட்டால், அவை அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு பிக்சர் லைப் தளத்தில் சேவ் செய்யப்படும். அனைத்தும் முடிந்த பின்னரும், நீங்கள் பிக்சர் லைப் தளம் சென்று, உங்கள் போட்டோக்களை ஆல்பங்களாகப் பிரிக்கலாம். நீங்களாகவே, போட்டோக்களை இதன் பின்னர் அப்லோட் செய்திடலாம். இதில் ஏதாவது பிரச்னை ஏற்பட்டால், இந்த தளம் தனியே இதற்கென சப்போர்ட் பக்கம் ஒன்றை இயக்குகிறது.

பல நூறு, ஏன் ஆயிரக்கணக்கான நம் போட்டோக்களைப் பத்திரமாகப் பதிந்து வைத்து, நம் வாழ்நாளின் பிற்காலத்திலும், நம் சந்ததியினரும் பார்த்து ரசிப்பது, வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தையும் மகிழ்ச்சியையும் கொடுக்கும். எனவே, இதுவரை இது போன்ற தளம் எதனையும் பயன்படுத்தாதவர்களும், பிறவற்றைப் பயன்படுத்தி வருபவர்களும் இதனைப் பார்க்கலாம்.



கார்பன் ஏ 29 – பட்ஜெட் விலையில் ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட்போன்

சஹோலிக் (Saholic) இணைய விற்பனைத் தளத்தில், கார்பன் ஏ29 என்னும் புதிய ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட் போன் ரூ.8,990க்குக் கிடைக்கிறது. இதன் 4.7 அங்குல திரை ஐ.பி.எஸ். டிஸ்பிளே கொண்டுள்ளது. இதில் ஆண்ட்ராய்ட் 4.1 ஜெல்லிபீன் ஆப்பரேட்டிங் சிஸ்டம் இயங்குகிறது. இதனை 1.2 டூயல் கோர் ப்ராசசர் இயக்குகிறது. இதன் பின்புறம் இணைக்கப்பட்டுள்ள கேமரா 8 மெகா பிக்ஸெல் திறனுடன் எல்.இ.டி. பிளாஷ் கொண்டுள்ளது. முன்புறமாக வீடியோ

அழைப்பிற்கென, 2 எம்பி திறனுடன் கேமரா தரப்பட்டுள்ளது. இரண்டு சிம்களை இதில் பயன்படுத்தலாம். நெட்வொர்க் இணைப்பிற்கு 3ஜி, வை-பி, இ.டி.ஆர். இணைந்த புளூடூத், A2DP, மற்றும் எகு தொழில் நுட்பங்கள் இயங்குகின்றன.

எப்.எம். ரேடியோ, 3.5 மிமீ ஆடியோ ஜாக் தரப்பட்டுள்ளன. இதன் உள் நினைவகம் 4 ஜி.பி. இதில் பயனாளர் 2 ஜிபி வரை பயன் படுத்தலாம். இதனை மைக்ரோ எஸ்.டி. கார்ட் கொண்டு 64 ஜிபி வரை அதிகப்படுத்தலாம். இதில் 2000 mAh திறன் கொண்ட பேட்டரி தரப்பட்டுள்ளது.

வீடியோகான் தரும் பட்ஜெட் ஸ்மார்ட்போன்

பட்ஜெட் விலையில், புதிய ஸ்மார்ட் போன் ஒன்றை வீடீயோகான் நிறுவனம் ஏ24 என்ற பெயரில் வெளியிட்டுள்ளது. இதன் அதிக பட்ச விலை ரூ. 4,699. இதில் ஆண்ட்ராய்ட் 4.2 ஜெல்லி பீன் ஆப்பரேட்டிங் சிஸ்டம் இயங்குகிறது. இதன் ப்ராசசர் 1.2 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் செயல்படுகிறது. 4 அங்குல திரையில் டிஸ்பிளே கிடைக்கிறது. இரண்டு சிம் இயக்கம், 3.2 மெகா பிக்ஸெல் பின்புறக் கேமரா, 0.3 மெகா பிக்ஸெல் முன்புறக் கேமரா, எட்ஜ் (2ஜி) தொழில் நுட்பம் ஆகியவை கிடைக்கின்றன. இதன் பேட்டரி 1,450 mAh திறன் கொண்டது. டைம்ஸ் ஆப் இந்தியா, பன் ஸோன், ஹங்கமா போன்ற அப்ளிகேஷன்கள் போனிலேயே பதியப்பட்டு தரப்படுகின்றன. இந்நிறுவனத்தின் வி ஸ்டோரில் (V Store) வாட்ஸ் அப் போன்ற அப்ளிகேஷன்களை இலவசமாக தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பதிவு செய்திடும் வசதியுடன் எப்.எம். ரேடியோ, 3.5 மிமீ ஆடியோ ஜாக், A2DP இணைந்த புளூடூத் 2.1, வை-பி ஆகிய வசதிகள் உள்ளன. இதன் ராம் மெமரி 252 எம்.பி. ஸ்டோரேஜ் மெமரி 512 எம்.பி., இதனை எஸ்.டி. கார்ட் கொண்டு 32 ஜிபி வரை அதிகப்படுத்தலாம். 1,450 mAh திறன் கொண்ட பேட்டரியின் துணையுடன், 4 மணி நேரம் தொடர்ந்து பேசலாம். 200 மணி நேரம் பேட்டரியில் மின் சக்தி தங்குகிறது. குரோம் வெள்ளை மற்றும் கருப்பு வண்ணங்களில் இந்த ஸ்மார்ட் போன் கிடைக்கிறது.

இன்டெக்ஸ் தரும் தொடக்க நிலை ஸ்மார்ட் போன்

இன்டெக்ஸ் டெக்னாலஜிஸ் நிறுவனம், க்ளவ்ட் எக்ஸ் 3 (Cloud X3) என்ற பெயரில், தொடக்க நிலை ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட் போன் ஒன்றை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. வை-பி, எப்.எம். ரேடியோ, ஜி.பி.எஸ். மற்றும் புளூடூத் உள்ளடக்கிய மீடியா டெக் நிறுவனத்தின் டூயல் கோர் ப்ராசசர் இயங்குகிறது. இந்த சிப்புடன், ஸ்மார்ட் போன் ஒன்றை முதன் முதலில் இன்டெக்ஸ் நிறுவனம் வடிவமைத்துத் தந்துள்ளது. இந்த சிப்பில் கோர்டெக்ஸ் ஏ 7 சி.பி.யு. சப் சிஸ்டம் உள்ளது. இதனுடைய வேகம் 1.3 கிகா ஹெர்ட்ஸ். இதில் நவீன 28 என்.எம். தொழில் நுட்பம் உள்ளது. இரண்டு சிம்களை இது இயக்குகிறது. 2 மற்றும் 0.3 மெகா பிக்ஸெல் திறன் கொண்டு, பின்புறமாகவும், முன்புறமாகவும் இரண்டு கேமராக்கள்

இயங்குகின்றன. ஆண்ட்ராய்ட் 4.2 ஜெல்லி பீன் ஆப்பரேட்டிங் சிஸ்டம் இவற்றை இயக்குகிறது. 2G EDGE/GPRS, Wi-Fi,Bluetooth, மற்றும் GPS ஆகியவை நெட்வொர்க் இணைப்பினை எளிதாகவும், விரைவாகவும் ஏற்படுத்தி இயக்குகின்றன. எப்.எம். ரேடியோ, 3.5 மிமீ ஆடியோ ஜாக், 256 எம்பி ராம் நினைவகம், 115 எம்பி ஸ்டோரேஜ் மெமரி, இதனை 32 ஜிபி வரை அதிகப்படுத்தும் வசதி ஆகியவை கிடைக்கின்றன. இதன் 1,450 mAh திறன் கொண்ட பேட்டரி, தொடர்ந்து ஆறு மணி நேரம் பேசும் வசதியைக் கொடுக்கிறது. 200 மணி நேரம் மின் சக்தி தங்குகிறது. இதன் அதிக பட்ச விலை ரூ.3,790. அனைத்து மொபைல் கடைகளிலும் மற்றும் இன்டெக்ஸ் நிறுவனத்தின் தனிப்பட்ட விற்பனை மையங்களிலும் இவை விற்பனை செய்யப் படுகின்றன. கருப்பு மற்றும் வெள்ளை என இரண்டு வண்ணங்களில் இது கிடைக்கிறது.

எச்.டி.சி. டிசையர் 600

சென்ற வாரம், எச்.டி.சி. நிறுவனம், அதிகார பூர்வமாகத் தன் டிசையர் 600 மொபைல் போனை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு சிம்களும் எப்போதும் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட முதல் எச்.டி.சி. போன் இதுதான் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு சிம்மில் பேசிக் கொண்டிருந்தாலும், அடுத்த சிம் பயன்படுத்தி, இன்னொரு வரை அழைக்கலாம். எனவே, இரண்டு சிம்களையும் ஒரே நேரத்தில் இயக்க, மற்ற மொபைல் போன்களில் இருப்பதைப் போல, தனி செட்டிங்ஸ் அமைக்க வேண்டியதில்லை. இதன் மற்ற சிறப்பு அம்சங்களாகக் கீழ்க் கண்டவற்றைக் குறிப்பிடலாம்.

1,860 mAh திறன் கொண்ட லித்தியம் அயன் பேட்டரி, 2 பின் சார்ஜர், 8 ஜிபி அளவில் உள் நினைவகம் 1.2 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும் ஸ்நாப் ட்ரேகன் ப்ராசசர், 1 ஜிபி ராம் நினைவகம், 4.5 அங்குல அகலத்தில் எல்.சி.டி. திரை டிஸ்பிளே, உள்ளாக அமைந்த ஆம்ப்ளிபையர், இரு ஸ்டீரியோ ஸ்பீக்கர்கள், ஆண்ட்ராய்ட் 4.1.2 ஜெல்லி பீன் ஆப்பரேட்டிங் சிஸ்டம், 8 எம்.பி. திறன் கொண்ட கேமரா, எல்.இ.டி. ப்ளாஷ், பி.எஸ்.ஐ. சென்சார், 1.2 கிகா ஹெர்ட்ஸ் வேகத்தில் இயங்கும் குவாட் கோர் ப்ராசசர் மற்றும் 1.6 எம்பி திறனுடன் முன்பக்க கேமரா.



இதன் விலை ரூ. 26,990 எனக் குறிப்பிட்டாலும், சந்தையில் குறைக்கப்பட்ட விலையில் கிடைக்கிறது.

PERSONAL BREAK

விண்டோஸ் 8.1ல் என்னவெல்லாம் இல்லை என்று பட்டியலிட்டதனால், தேவை இன்றி அதில் தேடும் நேரம் மிச்சமாகியது. நன்றி.

கா. பாவை, சென்னை.

ப்ளாஷ் ட்ரைவ் எப்போதும் நன்றாகப் பயன்படுத்தப்பட்ட பின்னரே, அதன் பயன்பாட்டினை இழக்கிறது. இது உண்மையே. தண்ணீரில் போட்டு எடுத்த பின்னரும் மிகவும் அருமையாக உழைக்கிறது. இது என் அனுபவம்.

சி.ஆர். சந்திர சேகரன், இராஜபாளையம்.

காலத்தின் தேவையை நிறைவேற்ற வந்தது போல, உங்களின் வேர்ட் 2007 தொகுப்பிற்கான டிப்ஸ்கள், பெரும் உதவியாய் உள்ளன. இப்படியே இதனைத் தொடர்ந்து வெளியிட்டால், புதிய 2007 தொகுப்பிற்கு மாறியுள்ள எங்கள் அலுவலக ஊழியர்களுக்கு உதவியாய் இருக்கும்.

சி. மார்த்தாண்டம், சென்னை.

வேர்ட் 2007, செட்டிங்ஸ் மேற்கொள்ள வேண்டிய பல விஷயங்களில், பல புதிய இடங்களில் வைத்துள்ளது. வேர்ட் 2003 பயன்படுத்தியவர்கள், தடுமாற வேண்டியுள்ளது. நீங்கள் கொடுத்துள்ள டிப்ஸ் கட்டுரை மிக மிக உதவியாய் உள்ளது. மிக்க நன்றி.

ஆ. ஸ்டெல்லா, திருப்பூர்.

புதிது புதிதாய் வைரஸ் பரவி, திகிலூட்டும் இந்நாளில், தாங்கள் அவை குறித்து உடனுக்குடன் தரும் தகவல்கள், கம்ப்யூட்டரைப் பாதுகாப்பதில் உதவுகின்றன.

எஸ். மாணிக்கராஜன், திருச்சி.

விண்டோஸ் எக்ஸ்பி பயன்படுத்தினால், ஆபத்து அதிகம் நிச்சயம் இருக்கும் என்பது தொடர்ந்து உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது. தாங்களும் பொதுமக்கள் நலன் கருதி, தகவல்களை வெளியிட்டு வருகிறீர்கள். சென்ற வாரம், அரசின் சைபர் காவல் துறையின் எச்சரிக்கை சரியான நேரத்தில் தரப்பட்ட ஒன்று. மக்கள் விழித்துக் கொண்டு புதிய ஆப்பரேட்டிங் சிஸ்டத்திற்கு மாறுவது நல்லது.

பேரா. எஸ். செல்வவிநாயகம், கோவை.

இணைய இணைப்பு என்றாலே, நம் பெர்சனல் தகவல்கள் திருடப்பட்டுவிடுமோ என்ற பயத்திலேயே இருக்கிறோம். குறிப்பாக குக்கிகள் குறித்து அதிகக் கவலைப்படுகிறோம். இந்நிலையில், நீங்கள் தந்துள்ள இணைய முகவரிகளும் குக்கி பைல்களும் என்ற கட்டுரை, பல தகவல்களைத் தந்து பயத்தைப் போக்கியுள்ளது. மிக்க நன்றி.

எஸ். உமா செல்வராணி, விருதுநகர்.

விண்டோஸ் 8 சிஸ்டத்தில் சேப் மோட் இல்லை என்றே எண்ணி பயன்படுத்தி வந்தேன். நீங்கள் கொடுத்துள்ள டிப்ஸ் மற்றும் விளக்கம் என் தவறான எண்ணத்தினைப் போக்கியது.

என். அப்துல் ரசாக், புதுக்கோட்டை.

Feature Phones என்று சொல்லக் கூடிய இரண்டாம் நிலை போன்களில், பேஸ்புக் போன்று, மற்ற அப்ளிகேஷன்களும் கிடைக்கப்பெற்றால், நிச்சயம் கிராம மக்களுக்கு, தகவல் பரிமாற்றத்தில் உதவி கிடைக்கும். இதனை தகவல் தொடர்பில் ஈடுபட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் எண்ணிப் பார்க்க வேண்டும். பேஸ்புக் இவ்வகையில் நல்ல வழி காட்டியுள்ளது.

என். சுவர்ணமதி, திருவண்ணாமலை.

விண்டோஸ் 8 சிஸ்டம் கம்ப்யூட்டர், டச் ஸ்கிரீன் இணைந்து வாங்கிப் பயன் படுத்தத் தேவையான டிப்ஸ் களைத் தொடர்ந்து அளிக்கவும். இது ஒரு புதிய வகை சிஸ்டம் என்பதால், எல்லாருக்குமே இவை தேவைப்படும்.

ஆர். கனகராஜ்,காரைக்கால்.

கேள்வி பதில் பகுதியில், ஆண்ட்ராய்ட் மற்றும் ஜாவா குறித்து நீங்கள் தந்த தகவல்கள் பயனுள்ளவையாகவும், தவறான எண்ணத்தைப் போக்கு வதாகவும் உள்ளன.

கா. சுரேஷ் குமார், காரப்பாக்கம், சென்னை.

கையளவில் உலகம் என்ற கூற்றினை உண்மையாக்கும் வகையில், ஸ்மார்ட் போன் மற்றும் பிற போன்களில் இணைய இணைப்பு மற்றும் தகவல் தொடர்பு வசதிகள் கிடைத்து வருகின்றன. இவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்ற வகையில் டிப்ஸ்கள் தந்தால், அவை பெரிய உதவியாக இருக்கும்.

காதர் மைதீன், நாகப்பட்டினம்.

கேள்வி: என் பிரவுசரில் பைல் உள்ள மெனு பார் காணப்படவில்லை. இதற்கு ஒரு ஷார்ட் கட் உள்ளதாக முன்பு படித்ததாக ஞாபகம். நினைவில் இல்லை. இதற்கான டிப்ஸ் தரவும்.

எஸ். உத்தம்குமார், மதுரை.

பதில்: எந்த பிரவுசரை நீங்கள் பயன்படுத்தி வருகிறீர்கள் என்பதனைத் தெரிவிக்கவில்லை. இதே போன்று பல வாசகர்கள் சந்தேகத்தினை கேள்விகளாக அனுப்பியுள்ளதால், அனைத்து பிரவுசர்களுக்குமான குறிப்புகளைத் தருகிறேன்.

தற்போது வரும் திருத்தப்பட்ட பதிப்புகளில், அனைத்து பிரவுசர்களும் பைல் ("File") மெனுவினை எடுத்துவிட்டன. இணையப் பக்கத்தில் தேவையற்ற விபரங்களைக் காட்டும் பட்டைகளை நீக்கி, அவை தேவை எனில், பெறக்கூடிய ஷார்ட் கட் வழிகளையும் தந்துள்ளனர்.

பயர்பாக்ஸ் பிரவுசரில், பைல் மெனு இடது மேல் புறம், ஆரஞ்சு வண்ணத்தில், பயர்பாக்ஸ் பட்டனாக இடம் கொண்டுள்ளது. இதில் கிளிக் செய்தால், வழக்கமான பைல் மெனு கிடைக்கும். இதில் கீழாக "Options" என்னும் பிரிவு உங்களுக்குக் கூடுதலாக சில செட்டிங்ஸ் மேற்கொள்ள இடம் அளிக்கும். Menu Bar என்பதில் கிளிக் செய்தால், "File," "Edit," மற்றும் "View" போன்ற பட்டன்கள் கிடைக்கும். இதெல்லாம் தேவை இல்லை எனக் கருதி, பயர்பாக்ஸ் ஆரஞ்ச் நிற பட்டனே போதும் என எண்ணினால், மெனு பாரில், "View" பட்டன் அழுத்தி, "Toolbars" என்பதைத் தேர்ந்தெடுத்து, பின்னர் "Menu Bar" என்ற ஆப்ஷனில் உள்ள டிக் அடையாளத்தை எடுத்துவிடவும்.

கூகுள் குரோம் வெப் பிரவுசரில், வழக்கமான மெனு பாரினை நிலையாகப் பெற எந்த வழியும் தரப்படவில்லை. இதற்குப் பதிலாக "Bookmarks" டூல்பாரினைப் பெற வழி தருகிறது. இதில் உங்களுக்குப் பிடித்த இணைய தளங்கள் வழியே சென்று, தேவையானதைக்



கிளிக் செய்து பெறலாம். பிரவுசரின் மேலாக, டூல்பாரினை இணைக்க, ரென்ச் ("Wrench") ஐகானில் முதலில் கிளிக் செய்திடவும். இது, திரையின் மேல் வலது மூலையில், சிகப்பு வண்ணத்தில் உள்ள எக்ஸ் ("X") பட்டன் கீழாகக் கிடைக்கும். இதில் "Bookmarks" என்றுள்ளதுணை மெனுவினைத் திறக்கவும். புக்மார்க்ஸ் மெனு, திரையில் மேலாகக் காட்டப்பட "Show Bookmarks Bar" என்ற ஆப்ஷனில் கிளிக் செய்திடவும். இது தேவை இல்லை எனக் கருதினால், இந்த ஆப்ஷனிலேயே மீண்டும் கிளிக் செய்திடவும்.

இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசரைப் பொறுத்தவரை, அதன் பதிப்பு 9ல், "toolbar" தரும் வழக்கமான ஆப்ஷன்கள் அனைத்தும் நீக்கப்பட்டு விட்டன. பழைய மெனு பாரினைப் பெற வழியே இல்லாதது போல் தோன்றினாலும், மைக்ரோசாப்ட், ஒரு எளிய ஷார்ட் கட் வழியைத் தந்துள்ளது. இன்டர்நெட் எக்ஸ்புளோரர் லோட் ஆகும் போது, அல்லது ஆன பின்னர், ஆல்ட் கீ ("Alt") யினை அழுத்தவும். மெனுபார் கிடைக்கும். இந்த மெனு வேண்டாம் என்றால், மீண்டும் அதே ஆல்ட் கீயை அழுத்த, இந்த மெனு பார் மறைந்து விடும்.

கேள்வி: என்னுடைய விண்டோஸ் 7 பெர்சனல் கம்ப்யூட்டரில் கிடைக்கும் வாட்டர் மார்க் அடையாளத்தினை எப்படி நீக்குவது? எங்கும் அதற்கான வழி கிடைக்கவில்லை. தயவுச் செய்து செட்டிங்ஸ் வழி கூறவும்.

கே. சுஹாசினி, கோவை.

பதில்: வாட்டர் மார்க் அடையாளம் தெளிவாக ஒரு தகவலைத் தருகிறது. நீங்கள் எஸ்.பி.1 பேட்ச் பைலின் சோதனைப் பதிப்பினை இயக்கி வருகிறீர்கள். அப்படித்தான் என்றால், அதனை அன் இன்ஸ்டால் செய்து, சிஸ்டத்திலிருந்து நீக்கிவிட்டு, எஸ்.பி. 1 பேக்கின் முழுமையான இறுதியான பைலை இன்ஸ்டால் செய்திட வேண்டும். மேலும், நீங்கள் இயக்கும் தர்ட் பார்ட்டி புரோகிராம்களின் டிஜிட்டல் சான்றிதழுக்கு, மைக்ரோசாப்ட் அங்கீகாரம் அளிக்கவில்லை என்றாலும் இது போல் ஏற்படலாம். இது போன்ற நிகழ்வுகளுக்கு, மைக்ரோசாப்ட் இரண்டு வகை தீர்வுகளை வழங்கியுள்ளது.

வழி 1: ஸ்டார்ட் கிளிக் செய்து, கட்டத்தில் cmd *என டைப் செய்திடவும்.*

2. புரோகிராம்ஸ் (Programs) *என்பதன் கீழாக உள்ள* cmd.exe *என்ற பைலில் ரைட் கிளிக் செய்திடவும். பின்னர்,* Run as administrator *என்பதில் கிளிக் செய்திடவும்.*

3. கமாண்ட் ப்ராம்ப்ட் விண்டோவில், கீழே குறிப்பிட்டுள்ளதனை டைப் செய்து எண்டர் தட்டவும்.

bcdedit /set TESTSIGNING OFF

கமாண்ட் ப்ராம்ப்ட் விண்டோவினை மூடி, மீண்டும் விண்டோஸ் இயக்கத்தைத் தொடங்குங்கள். இந்த செட்டிங்ஸ், பிரச்னைக்குத் தீர்வினைத் தரவில்லை என்றால், இரண்டாவது வழியைப் பின்பற்றவும்.

மேலே தரப்பட்டுள்ள முதல் இரண்டு செயல்பாடுகளை மேற்கொள்ளவும். பின்னர், கமாண்ட் ப்ராம்ப்ட் விண்டோவில் கீழே



உள்ளதை டைப் செய்திடவும்.

bcdedit.exe -set loadoptions ENABLE_INTEGRITY_CHECKS

bcdedit.exe -set TESTSIGNING OFF

இனி, கமாண்ட் ப்ராம்ப்ட் விண்டோவினை மூடி வெளியேறவும். தொடர்ந்து விண்டோஸ் இயக்கத்தினை ரீபூட் செய்திடவும். இதில் உங்களுக்கான தீர்வு கிடைக்கும்.

கேள்வி: File Allocation Table (FAT) என்பது என்ன? இதனை கம்ப்யூட்டர் சார்ந்த கட்டுரைகளில் அடிக்கடி படிக்க நேரிடுகிறது. சற்று விளக்கவும்.

என். சுந்தரி சேகர், திருப்பூர்.

பதில்: File Allocation Table (FAT) என்பது, கம்ப்யூட்டரைப் பொறுத்தவரை, காலங்காலமாகப் பின்பற்றப்படும் ஒரு பைல் சிஸ்டம். மிக அதிகமாகப் பயன்படுத்தப்படும் பைல் வடிவமைப்பும் இதுதான். முதலில் பிளாப்பி டிஸ்க்குகளுக்கென இந்த பைல் சிஸ்டம் வடிவமைக்கப்பட்டு, பின்னர், பெர்சனல் கம்ப்யூட்டரில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஹார்ட் ட்ரைவ்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. முதலில் டாஸ் சிஸ்டம் பைலாகவும், பின்னர், விண்டோஸ் சிஸ்டத்திலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1980 முதல் 1990 இதுவே, பைல் பார்மட்டாக இருந்தது.

FAT பைல் சிஸ்டம், தற்போதைய நவீன பைல் சிஸ்டங்களுடன் ஒப்பிடுகையில், மிகவும் குறைவாகத்தான் மதிக்கப்படும். இருப்பினும், புதிய கம்ப்யூட்டர் சிஸ்டங்களும்

இதனைப் பயன்படுத்துகின்றன. குறிப்பாக, ப்ளாஷ் ட்ரைவ் போன்ற, இணைத்து நீக்கப்படும் மீடியா வகை சாதனங்களுக்கு இந்த பைல் முறை பயன்படுத்தப்படுகிறது.

கேள்வி: ஆன் ஸ்கிரீன் கீ போர்டுக்கென ஷார்ட் கட் கீ ஒன்றை எப்படி தயாரிப்பது?

என். சிவபாலன், புதுச்சேரி.

பதில்: நல்ல கேள்வி. நன்றி. பலருக்கு ஆன் ஸ்கிரீன் கீ போர்ட் ஒன்றை மைக்ரோசாப்ட் விண்டோஸ் இயக்கத்தில் கொடுத்துள்ளது என்றே தெரியாது. இதன் பெயர் சொல்கிறபடி, இது திரையில் காட்டப்படும் ஒரு கீ போர்ட். இதில், மவுஸின் கர்சரைக் கொண்டு, இயக்கினால், தேவைப்பட்ட எழுத்துகள் அமைந்த டாகுமெண்ட் கிடைக்கும். இனி இதற்கான ஷார்ட் கட் எப்படி அமைப்பது எனப் பார்க்கலாம்.

திரையில் காலியாக உள்ள இடத்தில், ரைட் கிளிக் செய்து கிடைக்கும் மெனுவில் New மற்றும் Shortcut மற்றும் ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்கவும். கிடைக்கும் Create Shortcut டயலாக் பாக்ஸில், கீழே தரப்பட்டுள்ளதை, டைப் செய்திடுக. C:\Windows\System32\osk.exe

தொடர்ந்து கிளிக் செய்த பின்னர், Next என்பதில் கிளிக் செய்திடவும். பின்னர், உங்கள் ஷார்ட் கட் கீக்கு, பெயரிடச் சொல்லி விண்டோஸ் கேட்கும். பெயர் கொடுத்தவுடன், ஷார்ட் கட் கீ திரையில் இருக்கும். இதனை எளிமையாகவும், விரைவாகவும் பயன்படுத்த, இந்த ஷார்ட் கட் கீயினை டாஸ்க்பாருக்கு அனுப்பலாம்.

கேள்வி: விண்டோஸ் 8 சிஸ்டம் பயன்படுத்தி வருகிறேன். இதில் உள்ள டாஸ்க் பார், விண்டோஸ் 7 சிஸ்டத்தில் இருந்ததைக் காட்டிலும் இரு மடங்கு பெரியதாக அமைந்துள்ளது. இதனை எப்படி சிறியதாக மாற்றுவது?

என். இராம ராஜன், செங்கல்பட்டு.

பதில்: எளிதாக சில விநாடிகளில் மாற்றிவிடலாம். டாஸ்க்பாரில் ரைட் கிளிக் செய்திடவும். இதில் Lock taskbar என்பதில் டிக் அடையாளம் இல்லை என்பதனை உறுதிப்படுத்தவும். இருந்தால், மவுஸ் கர்சரால் கிளிக் செய்து எடுத்துவிடவும். இனி, டாஸ்க்பாரின் மேலாக உள்ள கோட்டின் அருகே மவுஸ் கர்சரைக் கொண்டு செல்லவும். கர்சர் இரு அம்புக் குறி கொண்ட அடையாளமாக மாறும் வரை கோட்டின் மீதாக சுழற்றிச் செல்லவும். மாறிய பின்னர், அதனைக் கீழாக அல்லது மேலாக இழுத்து, டாஸ்க்பாரின் அகலத்தைத் தேவையான அளவில் அமைத்துக் கொள்ளலாம். தேவையான அளவில் வைத்தவுடன், மீண்டும் டாஸ்க்பாரின் மீது ரைட் கிளிக் செய்து, Lock taskbar என்பதில் டிக் அடையாளத்தை ஏற்படுத்தவும்.

கேள்வி: விண்டோஸ் 8 பயன்படுத்தி வருகிறேன். என் மானிட்டர் டச் ஸ்கிரீன் மானிட்டர் இல்லை. விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கு இன்டர்நெட் எக்ஸ்புளோரர் இரண்டு பதிப்புகளாகக் கிடைக்கிறது என்று முன்பு ஒரு தகவல் கொடுத்தீர்கள். நான் அதன் மெட்ரோ பதிப்பை, என் சிஸ்டத்தில் பயன்படுத்த முடியுமா?

எஸ். நிரஞ்சனா, சென்னை.

பதில்: இண்டர்நெட் எக்ஸ்புளோரரின் மெட்ரோ பதிப்பு, விண்டோஸ் 8 சிஸ்டத்தினை தொடு திரையில் இயக்குபவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. இதில் உள்ள பட்டன்கள் சற்றுப் பெரிதாக அமைக்கப்பட்டுள்ளது. அப்போது தான், நம் விரலால் சரியாகத் தொட்டு இயக்க முடியும். இந்த கட்டங்களும் வேறு வகையில் அமைக்கப்பட்டிருப்பதனைப் பார்க்கலாம். இதனை தொடு உணர் திரை இல்லாத மானிட்டர்களிலும் பயன்படுத்தலாம். அவ்வாறு பயன்படுத்தியவர்கள், மவுஸின் கர்சருக்கு இது சரியாகவும் விரைவாகவும் இயங்கவில்லை எனக் குறை கூறினார்கள். எனவே தான் மைக்ரோசாப்ட், மவுஸ் கொண்டு துல்லியமாக இயக்கும் வகையில், இன்னொரு பதிப்பினைக் கொண்டு வந்துள்ளது. உங்களுடைய மானிட்டருக்கேற்ற வகையில், அதனையே நீங்கள் பயன்படுத்தலாமே.

தொழில் நுட்பம்

Hard Disk : (ஹார்ட் டிஸ்க்) பைல்களைப் பதிந்து வைத்து இயக்கப் பயன்படும் ஓர் அடிப்படை சாதனம். இதில் அனைத்து வகை பைல்களையும் பதியலாம். ஆப்பரேட்டிங் சிஸ்டம் (விண்டோஸ்), அப்ளிகேஷன் சாப்ட்வேர் (எம்.எஸ்.ஆபீஸ், பேஜ்மேக்கர் போன்றவை) மற்றும் இவற்றால் உருவாக்கப்படும் பைல்கள் அனைத்தையும் இதில் பதியலாம். இதனை முறையாகவும் கவனமாகவும் கையாள வேண்டும். இது கெட்டுப் போவதைத்தான் ஹார்ட் டிஸ்க் கரப்ட் ஆகிவிட்டதாகக் கூறுவார்கள். ஒரு முறை கெட்டுப் போனால் அதனை மீண்டும் சரி செய்வது சிரமமான காரியம். எனவே இதில் பதியப்படும் பைல்களுக்கு நகல் எடுத்து தனியே இதைப் போன்ற வேறு சாதனங்களில் பதிந்து வைப்பது நல்லது.